RNI. No. TNBIL/2014/60761

# SCHOOL VOICE
# ஸ்கூல் வாய்ஸ்

Tamil & English Bi - Monthly Magazine

E-Mail: schoolvoice2014@gmail.com Website: tnprivateschools.com



என்றும் கிறிஸ்துதாஸ் அவர்களின் வழியில் எங்கள் பணி தொடரும்

Volume: 1 Issue:7 April - May 2016 Page: 6 Price: Rs.25/-

# 746 மெட்ரிக் பள்ளிகள் நிச்சயம் நடைபெறும்!

**சமீபத்தில் நமது தனியார் பள்ளிகளை அச்சுறுத்தும் வகையில் 746 மெட்ரிக் பள்ளிகள், பேராசிரியர் சிட்டிபாபு கமிட்டி அடிப்படையில், ஜி.ஓ.48ன் படி (மாநக ராட்சி பள்ளிகளில் 6 கிரவுண்டு, 10 கிரவு ண்டு நகராட்சியிலும், 1 ஏக்கர் பேரூராட்சி பகுதியிலும், 3 ஏக்கர் ஊராட்சி பள்ளியிலும் இருக்க வேண்டும்) என்பதை நிறைவு செய்யாத பள்ளிகள் என கூறி வருகிறது.**



ADV. M.J.Martin Kennedy, M.A(His.), M.A.(Eng)., M.A.(Jour)., M.Phil., B.Ed.,B.L., மாநிலத் தலைவர். 9941334341

உண்மை நிலை என்ன எனப்பார்த்தால், இந்த 746 பள்ளிகள் 30 ஆண்டுகளுக்கு முன்பாக, 2004 கும்பகோணம் தீ விபத்திற்கு முன்பாக, சிட்டிபாபு கமிட்டி அமைக்கப்படுவதற்கு முன்பாக, நீதிபதி சம்பத் கமிஷன் அமைக்கப் படுவதற்கு முன்பாக, ஆர்டிஇ சட்டம் 2009க்கு முன்பாக (ஆர்டிஇ சட்டம் 2009ல் தான் பாராளுமன்றத்தில் இயற்றப்பட்டாலும் 2011ல் தான் நடைமுறைக்கு வந்தது) 2011ம் ஆண்டிற்கு முன்பாக, நிலம் அனைத்தும் ஒரே இடத்தில் அமையப் பெற வேண்டும் எனக் கூறிய ஜி.ஓ. வெளியிடப்பட்ட 2012க்கு முன்பாக இந்தப் பள்ளிகள் நடைபெற்றுக் கொண்டிருக்கிறதை அரசும், கோர்ட்டின் முன்னிலையிலும் எடுத்துச் செல்லப்படாமல் உள்ளது.



J.B.VIMAL M.A M.Phil., மாநில பொருளாளர்.

மெட்ரிக் பள்ளிகளின் விதிமுறைகள் படி 1978, முக்கிய ஆவணங்களான கட்டிட உரிமம், கட்டிட உறுதிச் சான்றிதழ், சுகாதார சான்றிதழ், தீயணைப்பு துறையின் என்.ஓ.சி. சான்று என முறையாக அங்கீகாரம் பெறும் பல ஆண்டாக நடந்து வந்த பள்ளிகள் அங்கீகாரத்தை புதுப்பித்துக் கொண்டு மெப்ரிக் பள்ளிகள் இயங்கி வருகின்றன.

1978–ல் மெட்ரிக்குலேஷன் பள்ளி விதிகள் தொகுக்கப்பட்டது. அதில் நில அளவையோ மற்ற விதிகளோ கொடுக்கப்படவில்லை.

2004ல் கும்பகோணம் தீ விபத்து மிகக் கோரமானது தான். ஆனால் இவ்விபத்து ஸ்ரீ கிருஷ்ணா அரசு உதவி பெறும் தொடக்கப்பள்ளியில் தான் நடைபெற்றது. இந்த அரசு உதவி பள்ளிகள் இன்றும் ஆஸ்பெஸ்டாஸ் வளைந்தும், சீமை ஓடுகளிலும், பாதுகாப்பில்லாத நிலையில் உள்ள பள்ளிகளில் இன்றும் தொடர் அனுமதியின்றி நடக்கிறதே...

2004க்குப் பின் விபத்து நடைபெற்ற வாரத்திலேயே நமது தனியார் பள்ளிகளில் 1700 பள்ளிகள் கூரை வேய்ந்த கட்டிடமாக இருந்து வந்தது. கூரைகள் பிரிக்கப்பட்டு நிரந்தர தீப்பிடிக்காத வகையில் உள்கட்டமைப்பில் வசதிகள் மாற்றியமைக்கப் பட்டு மேம்படுத்தப்பட்டது.



C.ஜோசப் சுந்தராஜ் M.A., - மாநில பொதுச் செயலாளர்

2006ல் சிட்டிபாபு கமிட்டி கொடுத்த பரிந்துரையின் பேரில், மெட்ரிக் பள்ளிகளில் நில நிர்ணயத்தில் உச்சவரம்பு குறைந்தபட்ச நில அளவு என்பது அரசின் விதி ஜி.ஓ.48ன்படி அரசு வெளியிட்டது. இதில் மாநகராட்சி 6 கிரவுண்டும், நகராட்சியில் 10 கிரவுண்டும், பேரூராட்சியில் 1 ஏக்கரும், ஊராட்சியில் 3 ஏக்கரும் பேராசிரியர் சிட்டிபாபு வழங்கிய கருத்துரைகள் இந்த ஜி.ஓ.48ல் அரசு விதியின்படி ஏற்றுக் கொள்வதாக அரசு அறிவித்தது. சிட்டிபாபு விதிகளின் பரிந்துரைப்படி அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளுக்கு ஜி.ஓ. அரசு விதி 49 அரசால் அறிவிக்கப்பட்டது. இதன்படி, குறைந்தபட்சம் நில அளவு அரசு மற்றும்

தொடர்ச்சி 2ம் பக்கம் பார்க்க...



CSI புதிய பேராயர் மேதகு ஜார்ஜ் ஸ்டீவன்சன் அவர்களை வாழ்த்திய போது... உடன் ஒய்எம்சிஏ பொதுச் செயலாளர் ஆசீர்பாண்டியன், தலைவர் இன்ஜினீயர் செல்வகுமார் உபதலைவர் வின்சென்ட் ஜார்ஜ், பொருளாளர் ராஜ்குமார், வழக்கறிஞர் ஈஸ்டர் ஆகியோருடன் மார்டின் கென்னடி.

# மருத்துவ நுழைவுத்தேர்வு
# கேள்விக்குறியாகும் மாணவர்களின் எதிர்காலம்



ADV. M.J.ஜான் M.A.,M.Ed.,M.Phil.,B.L., பத்திரிகை ஆசிரியர் 9940051234

*மருத்துவக் கல்வியின் தரத்தை உயர்த்த உச்ச நீதிமன்றம் சமீபத்தில் வழங்கிய தீர்ப்பு, நமது மாநில மாண வர்களின் எதிர் கால த்தை கேள்விக்குறி யாக்கும் வகையில் வழங்கியுள்ளது.*

*ஏற்கனவே பல வருடங்களாக சமச்சீர் மற்றும் CEE முறையில் தரம் தாழ்ந்த கல்வியை பயின்ற நம் தமிழ் மாணவர்கள், நிச்சயம் இந்த தீர்ப்பினால் பாதிக்கப்படலாம் என்பதே நிதர்சனம். அதுவும் இந்த ஆண்டே இந்த NEET என்கிற நுழைவுத் தேர்வை உச்சநீதிமன்றம் இட்ட உத்தரவுகள், நமது மாணவர்களை மிகுந்த பாதிப்புக் குள்ளாக்கியது. அதுவும் உடனடியாக 01-05-2016 அன்றே நடத்த வேண்டும் என்றும், குறிப்பாக அந்த தேர்வு மத்திய கல்வி வாரியப் பாடத்திட்டத்தின் சிபிஎஸ்சி அடிப்படையில் நடத்தப்பட வேண்டும் ென்பதும் நமது மாணவர்களை பாதிப்பு அடையச் செய்துள்ளது.*

*2014-15 கல்வி ஆண்டில், 12ம் வகுப்பு முடித்து விட்டு மதிப் பெண்கள் அடிப்படையில் மருத்துவக் கல்லூரியில், நுழைய காத்திருக்கம் நம் தமிழக மாநில மாணவர்களை*

தொடர்ச்சி 3ம் பக்கம்...

பள்ளிகளுக்கு

MINORITY STATUS

வாங்க வேண்டுமா?

தொடர்பு கொள்க:

Adv.M.J.மார்டின்கென்னடி: 9941334341

Adv.S.கார்த்திக்: 9841220988

பள்ளிகள் சார்ந்த ஆலோசனைகளுக்கு...

புதிய நர்சரி பள்ளிகள் ஆரம்பிக்க, அங்கீகாரம் தொடர்பான ஆலோசனை பெற கீழ்க்கண்ட சங்க நிர்வாகிகளை தொடர்பு கொள்க:

ஆர்.எஸ்.டேனியல் 8124134249

அருள்ராஜ் 9884253306

பள்ளிக்கான இடங்கள் விற்பனைக்கு உள்ளன...

பள்ளிகள் நிர்வாக மாறுதலுக்கு...

சென்னை, காஞ்சிபுரம், திருவள்ளூர் ஆகிய மாவட்டங்களில் நர்சரி மற்றும் மெட்ரிக் பள்ளிகள் நிர்வாக மாறுதலுக்கு இருக்கின்றன. பள்ளி இடங்களும் விற்பனைக்கு உள்ளன. பள்ளி நடத்த விரும்பும் நண்பர்கள் தொடர்பு கொள்க:

அருள்ராஜ் 9884253306;

ஆர்.எஸ்.டேனியல் 8124134249

PF பிரச்சனையா? ESI சிக்கலா?

கவலை வேண்டாம் தொடர்பு கொள்ள

குமரவேல் 7871765150

சத்தியராஜ் 7299957689

# விடைபெற்றார் மெட்ரீக் கல்வி இயக்குநர் திரு. ஆர்.பிச்சை

## புதிய இயக்குனராக டாக்டர் ராமேஸ்வர முருகன்



கல்வித் துறையில் தனது பணியை IMS ஆக (இன்ஸ் பெக்ஷன் ஆப் மெட்ரிக்கு லேஷன்ஸ் ஸ்கூல்) தொடங்கி பின்னர் காஞ்சிபுரம் டி.ஓ. ஆக.. பின் பல்வேறு நிலைகளில் அதிகாரியாக பணிபுரிந்து முன்னாள் மெட்ரிக் பள்ளி இயக்குனராக திரு.மணி அவருடைய களத்தில் மெட்ரிக் பள்ளிகளின் இணை இயக்குனராக சீரிய பணியாற்றி கடந்த சில ஆண்டுகளுக்கு முன்னர் தான் மெட்ரிக் பள்ளி இயக்குநராக பொறுப்பேற்று சீரிய முறையில் மெட்ரிக் பள்ளிகளுக்கு ஒரு வழிகாட்டியாக திகழ்ந்தவர் தான் திரு. ஆர்.பிச்சை அவர்கள்.

பல்வேறு சவால் நிறைந்த பணிகளை எளிதாக கையாண்டார். திரு.ஆர்.பிச்சை சார் அவர்களுக்கு எமது சங்கத்தின் சார்பிலும் 'ஸ்கூல் வாய்ஸ்' சார்பிலும் பாராட்டுக்களையும், வாழ்த்துக்களையும் தெரிவிப்பதில் மகிழ்ச்சியடை கிறோம்.



புதிய மெட் ரிக் கல்வி இயக்குனராக (பொறுப்பு) டாக்டர் ராமேஸ்வர முருகன் அவர் கள் பொறுப்பேற்றுக் கொண்டார். இளம் வயதில் பள்ளிக் கல்வி இயக்குனராக பணியாற்றி, பல்வேறு கல்வித்துறை சீர்த்திருத் தங்களை கொண்டு வந்தவர் திரு.ராமேஸ்வர முருகன் அவர்கள் பணி சிறக்க நமது சங்கத்தின் சார்பாகவும் 'ஸ்கூல் வாய்ஸ்' சார்பாகவும் வாழ்த்துக்களை தெரிவித்துக் கொள்வதில் பெருமைக் கொள்கிறோம்.

# 746 மெட்ரிக் பள்ளிகள்...

முதல்பக்க தொடர்ச்சி

அரசு உதவி பெறும் பள்ளிகளும் மெட்ரிக் பள்ளிகளுக்கு இணையாக அதாவது ஜி.ஓ.48ல் உள்ளது போல இருக்க வேண்டும் என அரசு அறிவுறுத்தியது. பின்பு 2008ல் ஒரே இடத்தில் இடம் கிடைக்காக மெட்ரிக் பள்ளிகள் 2 இடங்களில் வைத்தக் கொளளலாம் என்கிற அரசு ஆணையும் இயற்றப்பட்டது. அதன் பின்பு 2010–ல்ஒரே இடத்தில் விதிகளின்படி நில அமைப்பு ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற இயற்கைக்கு ஒவ்வாத நடைமுறைக்கு சாத்தியமில்லாத, முன்னுக்கு பின் முறணான விதியை தமிழக அரசு அறிவித்தது.

மேலும் பாடம் நாராயணன் அவர்களின் மாற்றம் இந்தியா அமைப்பின் சார்பில் பொது நல வழக்கு சென்னை உயர் நீதிமன்றத்தில் வழக்கு தொடரப்பட்டது.

இவ்வழக்கினை விசாரித்த உயர் நீதிமன்ற பெஞ்ச் தலைமை நீதிபதி திரு கவுல் அவர்கள் விசாரித்ததில் 5.2 லட்சம் மாணவ, மாணவியர்கள் இந்த நில அளவில் குறைவு என கூறப்பட்டுள்ள இந்த பள்ளிகளில் பயில்வதாக கூறப்பட்டது குறிப்பிட்ட போது, அரசு தரப்பில் மெட்ரிக் பள்ளிகளின் கண்காணிப்பு அதிகாரி கே. வெங்கடேசன் அவர்கள் சார்பில் கொடுக்கப்பட்ட மனுவில் 31.05.16 வரை இப்பள்ளிகளுக்கு தொடர் அங்கீகாரம் வழங்கப்பட்டுள்ளது எனவும் இந்த நில அளவை குறித்த முடிவு கொண்டு வருவதற்கு புதிய வல்லுனர் குழு அரசு ஏற்படுத்தியுள்ளது எனவும் இந்த தற்காலிக அங்கீகாரம் இந்த ஒருமுறை தான் தவிர்ப்பு ஆணையாக வழங்கப்பட்டுள்ளது எனவும் கூறப்பட்டது. இதைப் போன்ற தவிர்ப்பாணையை பயன்படுத்தி 1.6.2016க்கு மேல் இந்த பள்ளிகளுக்கு தெடார் அங்கீகாரம் வழங்கப்பட மாட்டாது என அரசு தரப்பில் தெரிவிக்கப்பட்டது.

மேலும் இந்த வல்லுனர் குழு குறைந்த அளவு நில அளவு சம்மந்தமாக அரசினால் அமைக்கப்பட்ட குழு அறிக்கை சமர்ப்பித்த பின், அதன் அடிப்படையில் இந்த பள்ளிகளுக்கு தொடர் அங்கீகாரம் தருவதற்கான முடிவுகளை இத்துறை எடுக்கும் என அரசு சார்பில் நீதிமன்றத்தில் அறிக்கை சமர்ப்பிக்கப்பட்டது.

மேலும் இப்பள்ளிகளை மூட வேண்டும் என்ற நிலை என்றோ அல்லது இப்பள்ளிகள் 31.5.2016க்குப் பின் நடைபெறக் கூடாது என்றோ நீதிமன்றத்தில் கூறப்படாத நிலையில் பத்திரிகைகளும், ஊடக நண்பர்களும் இதனை கையில் எடுத்து விவாதிக்க தொடங்க, இவ்விவாதமே இப்பள்ளிகள் நடக்குமா, நடக்காதா என்ற சூடான விவாதங்கள் நடைபெற்று வருவதை நமக்கெல்லாம் கலக்கத்தை ஏற்படுத்துவதை கண்டு நம் நிர்வாகிகள் பயம் கொள்ளத் தேவையில்லை. இந்தப் பள்ளிகள் தொடர்ந்து நடைபெற நமது சங்கம் தொடர்ந்து முழு வீச்சில் பாடுபட்டு வருவதை தெரிவித்துக் கொள்கிறோம்.

இதற்கிடையே உடனடியாக காஞ்சிபுரம் சுயநிதி பள்ளிகளின் தலைவர் திரு.பிரின்ஸ் பாபு ராஜேந்திரன், சிறுபான்மை பள்ளிகளின் தலைவர் திரு.உசேன் பாபு மற்றும் திருவள்ளூர் மாவட்டத்தின் சார்பில் திரு. ஆல்பா பென்னி மற்றும் தனியார் பள்ளிகளின் கூட்டமைப்பின் சார்பில் திரு. நீலம் அரசு அவர்களோடு நமது தலைவர் திரு. எம்.ஜெ.மார்ட்டின் கென்னடியும் இணைந்து இச் செய்தி குறித்தும் நீதிமன்ற தீர்ப்பு வராத நிலையில் விவாதிக்கப்பட்டது.

தாளாளர்கள் அனைவரும் பாதிக்கப்பட்ட நிர்வாகிகளுக்கு கூறிய ஆறுதல் வார்த்தைகள் நிச்சயம் சங்கங்கள் எந்த வகையில் செயல்பட்டு வருகிறது என்பது தெள்ளத் தெளிவாக தெரிய வருகிறது. நமது சங்க நிர்வாகிகளின் நமது தலைவர் திரு.M.J.மார்ட்டின் கென்னடி, செயலாளர் திரு.ஜோசப் சுந்தரராஜ், பொருளாளர் திரு.J.P.விமல் ஆகியோரும் நீதிமன்ற உத்தரவு கிடைத்தவுடன் கல்வித்துறை அதிகாரிகளை சந்தித்தோம். குழப்பமான சூழலில் குறைந்தபட்ச இட அளவு நிர்ணய வல்லுனர் குழு அறிக்கை வெளியிடப்படவில்லை எனவும் அந்த அறிக்கை வெளியிட்ட பின்னர் தான் அரசு இது குறித்து முடிவு எடுக்க இயலும் என கூறினார்கள். நமது சட்ட வல்லுனர்களைக் கொண்டு இத்தீர்ப்பினை ஆராய்ந்த போது நிச்சயம் பள்ளிகளை மூட விடாமல் காப்பாற்ற இயலும் என்கிற நம்பிக்கை எழுந்துள்ளது. ஏனெனில் ஜி.ஓ.48 மெட்ரிக் பள்ளிகளுக்கும் ஜி.ஓ.49 அரசு மற்றும் அரசு உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளுக்கு பொருந்தும் போது, பாதிக்கப்படும் மாணவ, மாணவியர்கள் 5.2 லட்சம் மட்டுமல்ல 425 அரசு உதவி பெறும் பள்ளிகளும் பாதிக்கப்படுவதால் 6.5 லட்சம் மாணவ, மாணவியர் ஆக மொத்தம் 12 லட்சத்துக்கும் அதிகமானவர்கள் இந்த பிரச்சினையால் பாதிக்கப்படுவர். மேலும் இந்த 425 அரசு உதவி பெறும் பள்ளிகளும் 746 மெட்ரிக் பள்ளிகளும் 2004க்கு முன் ஆரம்பிக்கப்பட்டது என்பது குறிப்பிடத்தக்கது.

மக்கள் தொகை மிக நெருக்கடியான பாரி முனை, தி.நகர், மயிலை, அடையார், இராயபுரம், புரசைவாக்கம், பழைய வண்ணாரப்பேட்டை இன்னும் பிற பகுதிகளில் பள்ளி அருகே இடம் கிடைப்பது என்பது மிகவும் சிரமமாக இருக்கும் பட்சத்தில் இந்த ஜி.ஓ.48 மற்றும் ஜி.ஓ.49ஐ நமது தனியார் சுயநிதி பள்ளிகளும், அரசு

உதவி பெறும் உயர்நிலை, மேல்நிலைப் பள்ளிகளிலும் இந்த நில அளவு பிரச்சினைக்கு நிறைவேற்ற முடியாத நிலையில் உள்ளது என்பது தான் நிதர்சன மான உண்மை. எனவே, அரசு வல்லுனர் குழு அறிக்கையினை உடனடியாக வெளியிட்டு அதில் நில நிர்ணயம் குறைக்கப்படுவதற்கான வாய்ப்பு இருக்குமென தெரிகிறது.

மாண்புமிகு நீதிபதி சம்பத் அவர்களின் அறிக்கையின்படி வெளியிட்டபடி ஜி.ஓ. 270படி எக்சிஸ்டிங் பில்டிங் என்ற தலைப்பில் கொடுக்கப்பட்டுள்ள விதிமுறைகளில் ஏற்கனவே பயன்படுத்தப்பட்டு வரும் பள்ளிக் கட்டடங்கள் நிலம் குறைவாக உள்ளதற்கு அந்தந்த பள்ளிகளின் கட்டிட உரிமை (டி'லைசன்ஸ்) அடிப்படையில் குறிப்பிட்ட மாணவ, மாணவியர்களின் எண்ணிக்கை நிர்ணயிக்கப்பட்டது. அந்த நிர்ணயத்தின்படி எண்ணிக்கை உயர்த்தக் கூடாது.

சமீபத்தில் அரசு கொடுத்த உத்தரவில் 1 ஏக்கர் விளையாட்டு மைதானம் ஒவ்வொரு பள்ளிக்கும் ஏற்படுத்த வேண்டும் என விதிமுறை வழங்கியது. இந்த விதிமுறையை (ஜி.ஓ) கர்நாடக மாநில தனியார் பள்ளிகள் கட்டமைப்பின் சார்பாக கர்நாடக உயர்நீதிமன்றத்தை அணுகிய போது இந்த உத்தரவு தற்போது இயங்கும் பள்ளிகளுக்கு பொருந்தாது என கூறப்பட்டது.

மேலும் மெடிக்கல் கல்லூரி, இன்ஜி. கல்லூரி, கலை கல்லூரி, நர்சிங் கல்லூரி, பாலிடெக்னிக் என பல்வேறு இடவசதிகள் முன்பு கொடுக்கப்பட்ட விதிமுறை களிலிருந்து குறைக்கப்பட்டுள்ளது. சமீபத்தில் ஏஐசிடிஇ அகில இந்திய தொழில்நுட்ப கழகம் தெரிவித்தபடி, பொறியியல் கல்லூரிகள் இரண்டு இடத்தில் நடைபெறலாம் என்கிற விதிப்படி நடத்தலாம் என தளர்வு செய்துள்ளது. மேலும், அகில இந்திய அளவில் திறம்பட கல்விச் சேவை செய்து வரும் பள்ளிகள் சுமார் 3 லட்சம் உள்ளது. இதில் பல்வேறு மாநிலங்களில், அந்தந்த மாநிலங்களில் ஏற்படுத்தப்பட்டுள்ள விதிகளின்படி, குறைவான உள்கட்டமைப்பு வசதிகள் என 38,000 பள்ளிகள் உள்ளதாக நமது தேசிய பள்ளிகளின் கூட்டமைப்பு தெரிவித்துள்ளது. டெல்லி உட்பட மாநிலங்களில் இந்த நில அளவு குறைபாடு, உள்கட்டமைப்பு வசதி குறைபாடு ஆர்டிஇ ஆக்ட் 2009க்குப் பின் இது ஒரு பெரியதொரு பிரச்சினையாக உள்ளது. டெல்லி, லக்னோ, சென்னை, மும்பை போன்ற பெருநகரங்களில் உள்கட்டமைப்பு வசதி மற்றும் நில அளவு காரணம் காட்டினால் பற்பல நகரங்களில் உள்வட்டங்களில் அதாவது ஆர்டிஇ விதிகளின்படி 1 கி.மீ. பரப்பளவில் அருகாமை பள்ளிகள் என்கிற ஆர்டிஇன் மிக முக்கிய அம்சமான அடிப்படை கொள்கையே மறக்கப்படுகிறது என்று தான் சொல்ல வேண்டும். ஆர்டிஇ என்பதே அருகாமை பள்ளிகள் ஏற்படுத்த வேண்டும் என்று தான் முக்கியமான அடிப்படையாக இருக்கும் போது இந்த ஆர்டிஇகள் மூலம் பள்ளிகளை மூடுவது என்பதே ஆர்டிஇ 2009ன் கொள்கை சாரசம்த்திற்கு எதிராக கருத்தில் கொள்ளப்படும்.

எனவே, அன்பு பள்ளித் தாளாளர்களே, பள்ளி நிர்வாகிகளே அச்சமின்றி உங்கள் கல்வி பணியினை ஆற்றி வாருங்கள். மறைந்த மாபெரும் கல்வியாளர் நமது சங்க நிறுவனர் திரு. கிறிஸ்துதாஸ் அவர்களால் ஏற்படுத்தப்பட்ட இச்சங்கம் உங்களுக்கு தேவையான தீர்வுகளை அரசிடமிருந்து பெற்றுத் தரும். இதையும் மீறி அரசு தராதபட்சம் நீதிமன்றத்தின் மூலம் பெற்றுத் தருவதற்கு தயாராக உள்ளது என்பதை தெரியப்படுத்துவதில் உவகைக் கொள்கிறோம்.

ஒன்றுபடுவோம், உயர்வடைவோம்.

**கும்பகோணம் தீ விபத்து மிக வருத்தத்துக்குரியது. ஆனால் இந்த விபத்து சத்துணவு கூடத்தில் ஏற்பட்ட குளறுபடியால் தான் தீ விபத்தாக மாறியது என்று நீதிபதி சம்பத் கமிஷன் ஆய்வறிக்கையில் கூறியுள்ளார். அவ்வாறு இருக்கையில், சத்துணவு கூடமே இல்லாமல் இயங்கும் தனியார் மெட்ரிக் பள்ளிகளில் படிக்கும் மாணவ, மாணவியர்கள் எந்த வகையில் பாதிப்பு அடைவார்கள் என்பது புரியவில்லை.**

**துவக்க அனுமதியோ அல்லது முதல் அங்கீகாரமோ விதிகளின்படி பெறாமல் இன்றும் பல பள்ளிகள் நடைபெற்று வருகின்றன. சிபிஎஸ்இ என்னும் இன்டர்நேஷ னல் பள்ளி என்ற பெயர்களில் அங்கீகாரம் இன்றி பல பள்ளிகள் செயல்படுகின்றன. இவ்வேளையில்முறையாகஅங்கீகாரம்பெற்று தரமான வகையில் கல்வியினை தந்து வரும் பள்ளிகளின் மீது அரசு ஏன் முழு வீச்சில் நடவடிக்கை எடுத்து வருகிறது என்பதுதான் புரியவில்லை. பல ஆசிரியர்கள் (400க்கும் மேல்) அரசு உதவி பெறும் பள்ளிகளிலும், மாணவர்களின் எண்ணிக்கை குறைவினால் உரிய பணியின்றி பணியாற்றுவதாகவும் அவர்களின் பணிகளை பாதுகாக்கும் பொருட்டே அரசு மெட்ரிக் பள்ளிகளையும், நர்சரி பள்ளிகளையும் நசுக்கும் முயற்சியில் அரசு ஈடுபட்டுள்ளதாக தெரிகிறது.**

**துவக்க அனுமதியின்றி நடைபெற்று வரும்போலிசிபிஎஸ்இமற்றும்இன்டர்நேஷனல் பள்ளிகள், ப்ளேஸ்கூல் போன்ற பாதுகாப் பின்மை யின்றி நடைபெற்று வருகிற பள்ளி களின் மீது அரசு நடவடிக்கை எடுத்தாலே பல்லாயிரக்கணகான மாணவர்கள் அங்கீ காரம் பெற்ற பள்ளிகளில் அரசு உதவி பெறும் பள்ளிகளில் சேர்க்கும் வாய்ப்பு கிடைக்கும் என்பதே எங்களது தாழ்மையான கருத்து.**

## 746 மெட்ரிக் பள்ளிகள்

மீண்டும் மே மாத முதல் வாரத்தில் பாடம் நாராயணன் அவர்கள் ஒரு பொது நல வழக்கை தாக்கல் செய்துள்ளார்கள். அதில் இந்த 746 குறைந்த நிலப்பரப்பில் விதிகளுக்கு மாறாக அமைந்துள்ளன. இவற்றின் பெயர்களை வெளியிட்டு இப்பள்ளிகளில் எந்த ஒரு புதிய கோரிக்கைகள் (New Admission) சேர்க்கக் கூடாது. மேலும் பயிலக் கூடிய மாணவர்களை, அருகாமையிலுள்ள அரசு பள்ளிகள் அரசு உதவிபெறும் பள்ளிகளில் சேர்க்க உத்தரவிட வேண்டும் எனக் கேட்டுக் கொண்டார். ஆனால், அரசு தரப்பில், ஏற்கனவே நமது சங்கம் பெற்றிட்ட ஜீன் 30 வரை – நமது பள்ளிகளுக்கு குறிப்பாக அந்த நில நிர்ணயக் குழுவின் அறிக்கையில்

**ஜூன் 1ம் தேதி வரும் வழக்கில் நாமும் இணைந்து போராட தங்களின் மேலான ஆலோசனையை அளிக்க தொடர்பு கொள்க:**
**ADV. M.J.ஜான்: 9940051234**
**ADV. குமரவேல் 7871765150**

வெளியிடாமல், எந்த நடவடிக்கையும் எடுகக்கூடாது என்று ஏற்கனவே வழக்கு தொடரப்பட்டுள்ளது எனக் கூறினார். அதனை ஏற்றுக் கொண்ட நீதிபதிகள் வாழ்க்கை வரும் ஜுின் மாதத்திற்கு தள்ளி வைத்துள்ளார்கள்.

எனவே நமது கிருஸ்துதாஸ் சங்கத்தின் வழக்கினால் நமது பள்ளிகள் தொடர்ந்து செய்லபட நீதிமன்றத்தின் உதவியுடன் ஆணை பெற அனைத்து முயற்சிகளும் எடுக்கப்பட்டு வருகின்றன என்பதை மகிழ்ச்சியுடன் தெரிவித்துக் கொள்கிறேன்.



எர்ணாவூர் செயின்ட் ஆண்டனிஸ் பள்ளியின் ஆண்டுவிழாவில் நிர்வாகி லயன் ஏ.முருகேஷ், நடிகர் பப்லு, கானா உலகநாதன் மற்றும் நமது தலைவர் மார்டின் கென்னடி.



மழலையர் பட்டமளிப்பு விழாவில் IAS அதிகாரி திருமிகு கிறிஸ்துதாஸ் காந்தி மற்றும் திரு ரவிக்குமார் டேவிட், அர்ஜுனா அவார்டி, திரு.மரிய இருதயம், வின்செண்ட் ஆகியோருடன் நமது தலைவர் மார்டின் கென்னடி மற்றும் பொதுச் செயலாளர் சுந்தர்ராஜ்.




CJC & Brindavan Schools Annual day Hon'ble Justice T.N.Vallinayagam, Lion A.Murugesh, J.B.Vimal, Sundaraj, Lion Paramesh and Correspondent R.S.Denial and Mr.Martin Kennedy.



St. Moses Matric School Annual Day Fuction - School Voice Editor M.J.John, Sri Vijayakumar, Madam Dorathy Prema and Rev Charles Jayakumar

## RTE25% இலசவ சேர்க்கைக்கான கட்டணங்கள் பெறாவிட்டால்...

தமிழக அரசு ஆர்டிஇ 25% இலவச சேர்க்கைக்கான கட்டணங்களை (ஆண்டு 2013, 2014, 2015) திருப்பியளித்த ஒரு ஸ்பெஷல் ஆர்டர் மூலம் நிதியுதவி அளித்தது. கடந்த மூன்று ஆண்டுகளாக எவ்வித கட்டணமும் திருப்பியளிக்காத நிலையில் நமது பள்ளி நிர்வாகிகள் மிகுந்த நிதிசுமையோடு இந்த பள்ளிகளை நிர்வாகித்து வந்தனர். ஆனால் பொதுச் செயலாளர் திரு. ஜோசப் சுந்தர்ராஜ், நமது தலைவர் எம்.ஜெ. மார்ட்டின் கென்னடி, பொருளாளர் திரு.ஜே.பி.விமல் ஆகியோரது தீவிர முயற்சியின் காரணமாக திருமதி எஸ்எஸ்ஏ பூஜா குல்கர்னி ஐஏஎஸ் அவர்களை சந்தித்து பேசி ஆவண செய்ததன் பலனாக பரவலாக எல்லா மாவட்டங்களிலும் உள்ள பள்ளிகளுக்கு இந்த ஆர்டிஇ 25% இலவச சேர்க்கைக்கான கட்டணங்கள் வழங்கப்பட்டு வருகிறது குறிப்பிடத்தக்கது.

மேலும் 2015–2016 கட்டணங்களை திரும்ப பெறுவதற்கான ஏற்பாடுகளும் நடைபெற்று வருவதை இந்நேரத்தில் தெரிவித்துக் கொள்கிறோம். இன்னும் RTE 25% இலவச சேர்க்கைக்கான பணத்தை பெறாத நர்சரி பள்ளிகள், ––– குறிப்பாக மாவட்ட அமைப்புடன் schoolvoice2014@gmail.com என்ற மின்னஞ்சலுக்கு கடிதம் மூலம் தெரியப்படுத்துமாறு கேட்டுக் கொள்கிறோம். இதனைத் தொடர்ந்து – உரிய துறை அதிகாரிகளை சந்தித்து உடனடியாக வழங்குமாறு நமது ஸ்கூல் வாய்ஸ் வலியுறுத்தும்.

# கேள்விக்குறியாகும் மாணவர்களின்....

முதல்பக்க தொடர்ச்சி

இந்த தீர்ப்பு மிகப் பெரும் தடையாக ஏமாற்றமாக அமைந்துள்ளது.

முக்கியமாக நமது ஸ்கூல் வாய்சும் தேசிய தனியார் பள்ளிகளின் கூட்டமைப்பும், நமது சங்கம் வலியுறுத்துவது இதுதான்... எப்படி உச்சநீதிமன்றம் ஒரே தேசம் ஒரே நுழைவுத்தேர்வு என்கிறதோ அதுபோல.... One India One Syllabus என்பதே நம் கோரிக்கையாகும்.

CBSE, IGSE, International என்கிற பல Syllabus இருக்கிறது. சமச்சீர் கல்வி எப்படி சமச்சீரற்ற கல்வியாக இருக்கிறது. இதனா, வந்த வினையே நம் தமிழக மாணவர்கள் இன்று எதிர்கொள்ளும் பிரச்சனை.

**கடந்த 17 ஆண்டுகளி அகில இந்திய அளவில் மிகப் பெயர் பெற்ற மத்திய அரசின் ஏய்ம்ஸ் மருத்துவமனையில் 6 மாணவர்கள் மட்டும் சேர்ந்துள்ளனர் என்பது நமது கல்வித்தரத்தின் சோக வரலாறு.**

மேலும் நமது தமிழ்நாடு State Board Syllabus எவ்வளவு தரம் குறைந்ததாக உள்ளது என்பதற்கு கீழ்க்காணும் புள்ளி விவரமே சான்று.

*2015-ல் ஐஐடியில் நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்களின் புள்ளி விவரம் நமக்கு சரியான தரமான கல்வி இல்லை என்பதே வெளிச்சமிட்டு காட்டுகிறது.*

*2015 – ஐஐடி நுழைவுத் தேர்வில் வெற்றி பெற்றவர்கள்*

| மாநிலம் | எண்ணிக்கை |
|---|---|
| தெலுங்கானா | 300 |
| ஆந்திரபிரதேசம் | 793 |
| மஹாராஷ்டிரா | 678 |
| CBSESylabus பயின்றவர்கள் | 5930 |
| தமிழ்நாடு ஸ்டேட் போர்டு பயின்றவர்கள் | 9 பேர் |

கல்வியாளர்கள் தமிழகத்தின் கல்வி நிலைகுறித்து கவலை கொண்டுள்ளனர். இந்த தரமில்லாக் கல்வி பயின்று தமிழ் மாணவர்கள் தலைநிமிர்ந்து எப்படி இருக்க முடியும்?

தமிழகத்தில் கல்வித்தரம் முறைப்படுத்தினால், லட்சக்கணக்கான மத்திய அரசு மருத்துவப் படிப்பிற்கான இடங்களில் நமது மாணவர்கள் போட்டி போட்டு சேர முடியவில்லை. மேலும் இந்த NEET அகில இந்திய நுழைவுத்தேர்வு கட்டாயம் எனில், கிட்டத்தட்ட தமிழகத்தில் உள்ள மருத்துவக் கல்வி இடங்களில் 90% வட மாநிலங்களை சேர்ந்தவர்களை எம்.பி.பி.எஸ்.சில் சேருவார்கள் என்பதும் கவலைக்குறிய விசயம்.

எனவே CBSE Syllabus - பாடத்திட்டத்தையே நமது பள்ளிகள் அனைத்திற்கும் பயன்படுத்துவதற்கும், அரசு பள்ளிகள், அரசு உதவி பெறும் பள்ளிகள்

தொடர்ந்து 10-05-2016 அன்று விசாரித்த நீதிபதிகள் அனில் ஆர்.தவே, சிவகீர்த்திசிங், ஏ.கே.கோயல் ஆகியோர் அடங்கிய அமர்வு கீழ்க்கண்ட உத்தரவை பிறப்பித்துள்ளது.

மே 1ம் தேதி நடத்தப்பட்ட தேசிய தகுதி நுழைவுத் தேர்வில் பங்கேற்ற மாணவர்கள் விரும்பினால் 2 ம் கட்டமாக ஜூலை 24ம் தேதி நடத்தப்படும் தேர்வில் பங்கேற்க அனுமதிக்கப்படுவார்கள். முதலில் எழுதிய தேர்வில் எடுத்த மதிப்பெண்கள் கணக்கில் எடுத்துக் கொளளப்பட மாட்டாது.

மே 1ம் தேதி தேர்வில் கலந்து கொள்ளாதவர்கள், ஜூலை 24ம் தேதி அன்று நடைபெற உள்ள 2ம் கட்ட நுழைவுத் தேர்வில் கலந்து கொள்ளலாம்.

மேலும் இந்த மருத்துவ நுழைவுத் தேர்வு ஆங்கிலம், இந்தி மட்டுமன்றி தமிழ், தெலுங்கு, மராத்தி, அசாமி, பெங்காலி, குஜராத்தி மற்றும் உருது ஆகிய மொழிகளில் நடத்தப்படும் வாய்ப்பு இருப்பதாக தெரிய வந்துள்ளது.

– டெல்லி உச்சநீதிமன்றத்திலில் இருந்து வழக்கறிஞர் குமரவேல்

மற்றும் தனியார் பள்ளிகளும் சிபிஷிணி பாடத்திட்டத்தையே அமல்படுத்த வேண்டும் என்கிற முடிவை தயக்கமின்றி தமிழக அரசு கொணரவேண்டும். இதுவே எம் மாணவர்களின் எதிர்காலத்திற்கும் உறுதுணையாகவே இருக்கும்.

மேலும் உச்சநீதிமன்ற உத்தரவை அடுத்து நம் மாணவர்கள் பாதிக்கப்படுவார்கள் என்கிற உணர்வு சாதாரணமாக, போராட்டத்தை நடத்திய டாக்டர்கள், செவிலியர்கள் ஆகியோரை அவர்கள் சார்ந்த சங்கங்களை நமது ஸ்கூல் வாய்ஸ் தலை வணங்கி மகிழ்கிறது. கல்வியாளர்களாகிய நாமும் நமக்கு உரிய, நமது மாணவர்களது எதிர்கால நலன் பாதிக்கப்பட்டால் நிச்சயம் நாமும் இவர்களுடன் இணைந்து மேற்பட வேண்டும்.

கடைசி செய்தி: தமிழக அரசின் கோரிக்கையை ஏற்று உச்சநீதிமன்றம் தமிழகம் உட்பட பல மாநிலங்களில் இந்த NEET மருத்துவ நுழைவுத் தேர்வு, இந்த ஆண்டு நடத்த தேவையில்லை என்கிற உத்தரவு, நமக்கும் நமது மாணவர்களுக்கும் ஆறுதலான செய்தியாகும். நன்றியுடன் ஸ்கூல் வாய்ஸ்.

உச்சநீதிமன்றம் இந்த தீர்ப்பை நடைமுறைப்படுத்தாமல், நமது Syllabus CBSEயாக மாறும் வரை ஒத்தி வைக்க வேண்டும். மதிப் பெண் அடிப்படையிலான சேர்க்கையை நமது மாநிலத்தில் தொடர வேண்டும். மத்திய, மாநில அரசுகள் இதற்கு முழுமுயற்சி எடுக்க வேண்டும் என்பதே நமது மாணவர்களின் கோரிக்கை. ஏனெனில் சமூக நீதி மற்றும் கிராமப்புற மாணவர்களின் எதிர்காலம் ஆகியவற்றை கணக்கில் கொண்டே இந்த மதிப்பெண் அடிப்படையிலான சேர்க்கை நடைபெற வேண்டும் என்று 'ஸ்கூல் வாய்ஸ்' வலியுறுத்துகிறது.

நம் மாணவர்களின் வாழ்க்கையோடு விளையாடும், எதிர்காலத்தையே சூனியமாக்கிடும் இந்த நுழைவுத்தேர்வு நமது மாணவர்களுக்கு இந்த சூழ்நிலையில் தேவையில்லை என்பதே ஸ்கூல் வாய்ஸ்-ன் கருத்து. பொறுத்திருப்போம். உச்சநீதிமன்றம் மற்றும் மத்திய மாநில அரசுகள் மீது நம்பிக்கை வைப்போம்.





Karnataka Private School Association Annual Day at Bangalore. Shri Vijay Shetty (GOA), Shri Gul Bushan sharma, New Delhi, Tomas Antony, Joseph Sundarajan with Martin Kennedy.

Martin Kennedy being greeted by Shri Anand vice President. karnataka.

### அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில்

# 2,000 போலி அரசு ஆசிரியர்களா?

## கிடுக்குப்பிடி விசாரணையில் அதிரடி போலீசார்



தர்மபுரியில் அரசு பள்ளிகளில் பல இடங்களில் போலி சான்றிதழ் கொடுத்து பலர் ஆசிரியர் பணியில் சேர்ந்திருப்பதாக பள்ளிக் கல்வித்துறைக்கு புகார் சென்றதையடுத்து, இரண்டு பேரை தனிப்படை போலீ சார் கைது செய்துள்ளனர். இதில், கிருஷ்ணகிரியை சேர்ந்த ராஜேந்திரன் (42) என்பார் தான் மூளையாக செயல்பட்டு வந்துள்ளார். இவரது தொழிலே போலி ஆவணங் கள், போலி சான்றிதழ்கள் தயாரித்து வருவது தானாம். அந்த வகையில் தர்மபுரியை சேர்ந்த முனியப்பன் (37) என்பவருக்கு போலி சான்றிதழ் தயாரித்து தந்துள்ளார். இதைக் கொண்டு கடந்த 2004ம் ஆண்டு ஆசிரியர் பணியில் சேர்ந்துள்ளார். தற்போது நாமக்கல் மாவட்டம் குமாரபாளையத்தில் அரசு பள்ளியில் ஆசிரியராக பணிபுரிந்து வருவ தும் பிளஸ் 2 தேர்வில் தோல்விய டைந்துள்ளார் என்பதும் தெரிய வந்துள்ளது.

இதே போல் கிருஷ்ணகிரி மாவட்டத்தை சேர்ந்த செந்தில் குமார் (38), 2008ம் ஆண்டில் போலி ஆவணம் தந்து சேலம் மாவட்டம் ஓமலூர் அரசு தொடக்கப்பள்ளி ஆசிரியராக சேர்ந்து தற்போது வேலூர் மாவட்டம் கந்திலி அரசு தொடக்கப் பள்ளி ஆசிரி யராக பணிய செய்து வருவதாக கண்டு பிடிக்கப் பட்டுள்து.

ஆக இவரோடு 3 பேரையும் கைது செய்துள்ள அதிரடி போலீசார், மேலும் அரசு மற்றும் அரசு உதவி பெறும் பள்ளிகளில் கிட்டத்தட்ட 2000 போலி ஆசிரியர்கள் கல்வித்துறையில் பணியாற்றுவதாக சந்தேகம் கொண்டுள்ளனர். இன்னும் இதுபோல் பலர் போலி சான்றிதழ் கொடுத்து பணியில் சேர்ந்திருப்பார்கள் என்பதால், தமிழகம் முழுவதும் ஆசிரியர்களின் சேர்க்கை கோப்புகளை தணிக்கை செய்ய கல்வித்துறைக்கு அறிவுறுத்தியுள்ளதால் பள்ளிக் கல்வித் துறையும் அரசு பள்ளிகளில் பணிபுரியும் ஆசிரியர்கள் மீது கிடுக்கிப்பிடி போட தயாராகி வருகிறது.

# FEES கமிட்டி இருக்கு ஆனா இல்ல...

ஏற்கனவே 2013–14, 2014–15, 2015–16 ஆகிய ஆண்டு களுக்கு மாண்புமிகு நீதிபதி சிங்காரவேலு அவர்களால் தனியார் பள்ளிகள், நர்சரி, பிரைமரி மற்றும் மேல்நிலைப்பள்ளி, தனியார் உதவி பெறும் பள்ளிகள் Self Finance வகுப்புகளுக்கும் நிர்ணயிக்கப்பட்டிருந்தது. நீதிபதி சிங்காரவேலு பதவிக்காலம் டிசம்பர் 2015ல் முடிவுக்கு வந்தது. அதன்பின்பு, இன்னும் புதிய நீதிபதியோ அல்லது அவருக்கு பதவி நீட்டிப்போ அரசால் தரப்படவில்லை. இதற்கிடையே தேர்தல் விதிமுறைகள் அமலுக்கு வந்ததால் தொடர்ந்து கல்விக் கட்டணக் குழு அதன் தலைவர் இன்றியோ, மாலுமி இல்லாத கப்பல் போல தவித்துக் கொண்டிருக்கிறது. இந்நிலையில் நாம் நமது நிர்வாகிகள் என்ன செய்வது எந்த கட்டணத்தை பெறு வது என்ற குழப்பத்தில் இருக்கிறார்கள்.

புதிய நீதிபதி தேர்தலுக்கு பின்போ அல்லது தேர்தல் கமிஷன் அனுமதி யோடு பொறுப்பேற்க வேண்டும். இந்த நிலையில் நாம் 2015–2016 அடிப்படையிலும் அல்லது ஒரு பகுதியாகவோ நீங்கள் வசூலித்துக் கொள்ளலாம். இது குறித்து நமது வழக்கறி ஞர்களின் ஆலோசனைக்கு எடுத்துச் செல்லப்பட்டது. மேலும் அரசுக்கு நமது சங்கத்தின் சார்பில் ஒரு மனுவை சமர்ப்பித் ததில் உடனடியாக நீதிபதியை நியமித்து தீர்வு காண வேண்டும் என கோரிக்கையும் விடுக்கப்ப ட்டுள்ளது.

மேலும், பள்ளிகளுக்கு தேவை யான அளவு கட்டண விகிதம் ஏற்படுத்தப்பட வேண்டும் என்கிற வகையிலும் ஆலோசிக்கப்பட்டு வருகிறது. வரம்பின்றி வசூலிக்கும் பெரிய பள்ளிகளும் உள்ளன. நிர்ணயிக் கப்பட்ட கட்டண விகிதத்தினால் நடைபெறுவதற்கு சிரமப் படும் சிறு பள்ளிகளும் இருக்கின்றன. இதனை கருத்தில் கொண்டு எல்லோரும் பயன் பெறும் வகையில் மக்களுக்கும் எவ்வித பாதிப்புமின்றி கட்டணம் நிர்ணயிக்கப்பட வேண்டும் என்பதுதான் நமது ஸ்கூல் வாய்சின் கோரிக்கையாகும்.

**– ஆர்.எஸ்.டேனியல்**

# SYMPOSIUM ON NEW EDUCATION POLICY AT LOYOLA COLLEGE

Jesuit Council for Education, Research and Training (JCERT), Loyola College of Education (LCE) and Secondary Education Commission (SEC) jointly organized one day symposium on 29th November in LCE on the New Education Policy (NEP). A core group with eight Jesuits and the Principal of LCE was formed for this purpose and this group met twice in St. Mary's, Madurai to plan for the symposium. Fr. Kennedy took care of the programme and the resource persons, Fr. Royce, all the local arrangements and Fr. Stephen, all the communications. This team worked wonderfully together to make this symposium a grand success.

The symposium was organized with fourfold aims, namely to examine the themes formulated by the GoI for consultation of school education, to formulate informed/enlightened responses on selected themes in the policy consultation document for school education, identify concerns that need further attention, deliberation and research and conscientize/enlighten other stakeholders, beneficiaries regarding this. There are 13 themes and 88 questions for school education in NEP.




Mr. Venkatesh Athreya, former acting vice-chancellor and registrar of Bharathidasan University, Tiruchirapalli gave the inaugural address. He stressed that this NEP is only an outcome of the Neo liberal economic policy and aims in a hidden way to saffronize education. In this attempt to internationalize education and open education to the global market, access to quality education to the poor will be completely denied.

Dr. V. Vasanthi Devi, former vice-chancellor of M.S. University, Tirunelveli spoke on the Indian national educational policies down the decades. She observed that any revolution in any field should be preceded by revolution in education because it is the basis for everything. She gave a clarion call to all the participants to become enormously powerful educational activists for reviving our democracy, sustaining our democracy and understand the communal context in which this policy is being brought about.



Prof. R. Ramanujam, scientist, IMSc, Taramani, Chennai brought out the different aspects of the NEP and also critiqued it. He stressed that we need to analyse any policy coming from the government from the perspective of the underprivileged majority of India. He noted that this policy emanates from the Hindutva ideology and tries to corporatize education.

There was a panel discussion after the presentations by the key note speakers where Mr. Isaac Mohanlal, Lawyer, Madurai Bench of the Madras High Court spoke on NEP and Minority Rights, Dr. S.S. Rajagopalan, an educational activist, on NEP and Teachers and Schools, Dr. V. Suresh, National General Secretary, PUCL, on the Constitutional Provisions and NEP and Mr. P.B. Prince Gajendra Babu, General Secretary of Common School System – TN, on Social Implications of NEP.



During the last session, moderated by Fr Joe Arun, there was an unanimous consensus to immediately respond to NEP collectively and come together as educationists atleast once a year on such educational issues. Principals, administrators, HMs of schools and a few activists involved in educational issues, totalling 281 participated in the symposium. Kudos to Fr. Royce and his team for making meticulous arrangements for the symposium.

***S.M. John Kennedy,***
***Director, JCERT.***



Adv. Mohd.Ghouse, Adv. Viji, J.M.Haroon Ex.Mp., , R.S.Daniel, Adv.Kamaraj, Adv. Johnson, Adv. Thomas with School Voice Editor John and Mr,. M.J.Martin Kennady, Head Master Balamurugan .

## Casual workers are also Employee as defined under ESI Act: Supreme Court

Supreme Court has held that casual workers are covered under definition of employee as

defined in Section 2(9) of the Employees State Insurance Act, 1948.

Apex Court Bench comprising of Justices V. GopalaGowda and ArunMisra was hearing the

appeal preferred by Royal Western India Turf Club Ltd. The Court observed that the



definition of "employee" is very wide and a person who is employed for wages in the factory or establishment on any work of, or incidental or preliminary to or connected with the work is covered.

The Court said that it is apparent from section 39 that an employee who is employed for a part of the wage period is also covered for the purposes of contribution. The definition of the term "employee" in section 2(9) is also wide enough to cover casual employees who are employed for part of wage period. They cannot be deprived of the beneficial provisions of the Act, the Bench observed

## இளம் சாதனையாளர்களை வாழ்த்துகிறோம்



ஐ.ஏ.எஸ்.தேர்வு முடிவு வெளியீடு; இந்தியாவில் முதலிடம் டீனா தாபி; தமிழகத்தில் முதலிடம் சரன்யா அரி

ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ். உள்ளிட்ட சிவில் சர்வீசஸ் பணிகளுக்கான இறுதித்தேர்வு முடிவுகள் வெளியிடப்பட்டுள்ளன.

இதில் இந்தியாவில் முதலிடம் பெற்ற பெண் டெல்லியைச் சார்ந்த டீனா தாபி முதலிடம் பிடித்துள்ளார். மேலும், தமிழகத்தைச் சார்ந்த சரன்யா அரி அகில இந்திய அளவில் 7ம் இடத்தையும், தமிழகத்தில் முதல் இடத்தையும் பிடித்துள்ளார். மனிதநேய மையத்தில் படித்த 46 பேர் இந்த தேர்வுகளில் வெற்றி முத்திரை பதித்துள்ளனர்.

தமிழகத்தில் இருந்து கலந்து கொண்ட 2600 பேரில் 855 பேர் நேர்முக தேர்வுக்கு தேர்வு பெற்றுள்ளனர் என்பது குறிப்பிடத்தக்கது. சாதித்த ஐ.ஏ.எஸ்., ஐ.பி.எஸ்., வெற்றியாளர்களை நமது 'ஸ்கூல் வாய்ஸ்' வாழ்த்தி மகிழ்கிறது.







## Justice H.L.Dattu appointed as new NHRC Chairman



(Justice H.L. Dattu)

Former Chief Justice of India H.L. Dattuhas been appointed as the new Chairman of National Human Rights Commission. The said post had been lying vacant since May 11 last year, when Mr. K.G. Balakrishnan demitted office after his five-year term. Justice Cyriac Joseph had been functioning as the acting chairperson since then. Justice H.L. Dattu had retired as the CJI on December 2, 2015.

## Madras HC permits a student branded by the school as 'mentally unfit' to appear in Class X exams



Madras High Court has asked a school to allow one of its student, which it branded him as 'mentally unfit", to appear in Class X theory and practical examination. Justice PushpaSathyanarayana asked the Education department to permit him to sit for practical examinations, without insisting on the formalities. Branding him as 'Mentally Unfit', the School had omitted the name of the student from the list of candidates taking up the public examinations. Aggrieved by this, the father of the student approached the High Court. The Court said "It is very unfortunate that a school, where a student spends most of his time than at home, has branded a student as mentally unfit.

Though the student has been studying in the school for more than one year, the school does not specify any abnormal behaviour of the said student or any incidents affecting the other children by the behaviour of that student. " The Court also observed that students studying in 10th standard as well as in 12th standard are under pressure for scoring marks to find a place in the rat race and they undergo tremendous pressure from their peers, parents and teachers driving them to go to depression. Continuous assessment tests, assignments, etc. also add to their woes in terms of performing well in the examination. Every student is experiencing this wilt under pressure. This may be one such case, the Court said. The Court directed the father of the student to remit fees, if any due to the school and also the examination fees within a week and further directed the Education Department to allow the student to appear the examinations without insisting on other formalities.



Meeting with Hon'ble Sadanatha Gowda Giving Representation to make Necessary amendnents in RTE Act 2019 with Mr.Sasikumar, General Secratary of Karnataka and R.C.Jain President of New Delhi Private School Association

# 8ஆம் வகுப்பு வரை நர்சரி பள்ளிகள் தரம் உயர்த்தப்பட வேண்டும்

**RTE இலவச சேர்க்கைக்கான பணம் திரும்ப உடனடியாக பள்ளிகளுக்கு தரப்பட வேண்டும். – தமிழ்நாடு பெற்றோர் சங்கம் கோரிக்கை**

RTE 2009க்கு பின் பள்ளிகளில் பல்வேறு மாற்றங்கள் கொணரப்பட்டுள்ளன. RTE 2009ன் படி கிட்டத்தட்ட 2 லட்சத்து 2000 பேர் இலவசமாகப் பயின்று வருகின்றனர். இவர்கள் பெரும்பாலும் CBSE மற்றும் பெரிய மெட்ரிக் பள்ளிகளில் சேருவது கிடையாது. RTE 25% இலவச சேர்க்கையை வருவதில் கிட்டத்தட்ட 70% நர்சரி பிரைமரி பள்ளிகள் தான் மிகச் சிறப்பாக நடைமுறைப்படுத்தி வருகின்றன.

இத்தகைய சூழ்நிலையில் ஒரு மாணவன் LKGயில் ஒரு பள்ளியில் சேர்ந்துவிட்டால் 5ஆம் வகுப்பு வரை மட்டுமே அவர் RTE 2009ல் இலவச சேர்க்கையில் படிக்க நேர்கிறது. அவர் 5ஆம் வகுப்பு முடித்து, மற்றோரு உயர்நிலை அல்லது மேல்நிலைப் பள்ளிக்கு சேரும்போது 6ஆம் வகுப்பு முதல் 8ஆம் வகுப்பு வரை RTE 2009, கட்டணம் செலுத்த் வேண்டிய சூழமுக்கு ஆளாகிறார்கள்.

எனவே RTE 2009ன் விதியின் படி மாணவன் LKG முதல் 8ஆம் வகுப்பு வரை இலவசம் என்கிற விதி கடைப்பிடிக்கப்படவில்லை அல்லது அரசால் RTE 2009ன் படி 25% இலவச சேர்க்கையில் சேர்க்கப்பட்ட மாணவனுக்கு அதனுடைய பலன் அந்த உரிமை மறுக்கப்படுகிறது என்பதே ஆகும். எனவே நர்சரி பிரைமரி



-V.P.Muthu Willams
President, Tamilnadu Parents' Association

பள்ளிகளில் LKG முதல் 8ஆம் வகுப்பு வரை நடத்துவதற்கு அனுமதி வழங்க, இந்த EWS RTE 2009ன் படி, LKG வகுப்பில் இலவசமாக சேர்க்கை பெரும் மாணவர்கள் அந்த நர்சரி பள்ளியிலே தொடர்ந்து 8ஆம் வகுப்பு வரை இலவச சேர்க்கையில் பயில அரசு ஆவண செய்ய வேண்டும் என பெற்றோர்கள் சங்கத் தலைவர்.முத்துவில்லியம்ஸ் கோரிக்கை விடுத்தார்.

### RTE இலவச சேர்க்கை

RTE 25% இலவச சேர்க்கையின் படி, ஏற்கனவே 2013–14, 2014–15ல் சேர்க்கப் பட்ட 2.20 லட்சம் மாணவர்களுக்கு, இதுவரை தனியார் பள்ளிகளுக்கு, முழுமையான பணம் திரும்ப தரவில்லை, இன்னும் 2015–2016க்கான பணம் திரும்பத் தருவதற்கான எந்தவித முயற்சியும் இதுவரை எடுக்கவில்லை.

ஏற்கனவே 2013–14, 2014–15க்கு இந்த RTE 25% இலவச சேர்க்கைகான பணம் திரும்ப கொடுக்காத நிலையில் 2016–17 க்கான, RTE 25% இலவச சேர்க்கை நடைபெறும் என அறிவித்துள்ளது.

ஏற்கனவே 2013–14, 2014–15, 2015–16 ஆகிய வருடங்களுக்கு பணம் சரியாக திரும்பக் கொடுக்காத நிலையில், எப்படி இந்த தனியார் பள்ளிகள் தொடர்ந்து இந்த இலவச சேர்க்கையில் ஈடுபடும் என்பதும் தெரியவில்லை. இது RTE இலவச சேர்க்கையில் தொய்வைத்தான் ஏற்படுத்தும் என்பதை தமிழக அரசு புரிந்து கொள்ள வேண்டும்.

S.S.A அதிகாரிகள் குறிப்பாக திரு. பூஜா குல்கானி, SSA Joint Director திருமதி Sasikala அவர்களும் மற்றும் S.S.A துறை அதிகாரிகள் விரைந்து செயல்பட்டு உரிய நடவடிக்கை எடுக்க வேண்டும் என எமது தமிழ்நாடு பெற்றோர் சங்கம் கேட்டுக் கொள்கிறது. RTE 25% Free seats தொடர்ந்து கொடுக்கப்பட வேண்டும். பணம் திரும்ப RTE 2009விதியின் படி அந்தந்த ஆண்டே வழங்கினால், இந்த திட்டத்தால் முழுமையாக பயன் பெறுவார்கள். எனவே அரசு அதற்கான முயற்சிகள் எடுத்து ஆவண செய்ய வேண்டும் என தமிழ்நாடு பெற்றோர்கள் சங்கத்தின் தலைவர்.முத்துவில்லியம்ஸ் தெரிவித்தார். ஆவண செய்யுமா? அரசு?






டெல்லி ஜந்தர்மந்தர் பகுதியில் நடைபெற்ற ஆர்டிஇ விதிகளில் மாற்றம் தேவை! பள்ளிகளை மூடாதீர் போராட்டத்தில் நமதுதலைவர் மார்டின் கென்னடி, பொதுச் செயலாளர் ஜோசப் சுந்தர்ராஜ், மற்றும் வழக்கறிஞர் ஜான் ஆகியோருடன் பிற மாநில தலைவர்கள்.

# ‘நான் அவளில்லை’... அலறும் பெண் அதிகாரி!

திருச்சி கிழக்கு, மேற்கு ஆதிகரம், லால்குடி உள்ளிட்ட பகுதிகளில் இருக்கும் 120 பள்ளிகள் உதவி தொடக்கக் கல்வி அலுவலர் ஹேமலதா கட்டுப்பாட்டில் உள்ளது. இவர் மீது பள்ளிகளின் சார்பில் லஞ்சம் வாங்குவதாக புகார் மனுக்களாக முதல்வர் முதல் கல்வித்துறை இயக்குநர், தொடக்கக் கல்வி இயக்குநர் ஆகியோருக்கு அனுப்பி வைக்கப்பட்டன.

இந்நிலையில் ஒரு பள்ளியின் அங்கீகாரம் புதுப்பிக்க ரூ.5 லட்சம் லஞ்சம் கேட்கும் வாட்ஸ்அப் ஆடியோ வெளியாகி, கல்வித்துறை வட்டாரத்துறையினரை அதிர்ச்சியுள்ளாக்கியிருக்கிறது.

**பள்ளி நிர்வாகி: மேடம்**



ஹேமலதா: நாளைக்கு 11 மணிக்கு அலுவலகம் வந்து ஆய்வு எழுத வரணும் யார் வருவா...?

எனத் தொடங்கும் பேச்சு...

**பள்ளி நிர்வாகி: ரெனிவல்காப்பி வாங்கும் போது தந்துடுவேன் மேடம். எவ்வளவோ என கேட்கிறார்.**

ஹேமலதா: ஒரு ஆண்டுக்கு தானே...

**நிர்வாகி: தற்காலிகமாகத் தான் மேடம்**

ஹேமலதா: போன முறை கொடுத்திருப்பீங்களே. சரி. ஃபைவ் கொடுங்க சார்.

**நிர்வாகி: தாளாளரை கேட்டுட்டு தர்ரேன்.**

ஹேமலதா: டிஇஓ அடுத்த மாதம் ஓய்வு பெறுகிறார். அதற்குள் செட்டில் செய்யணும். பிரச்னையாக இருக்கத் தான் போன்ல பேசுறேன்.

என்று பேசியது... இது தன் குரலே இல்லை. என ஏ.இ.இ.ஓ. ஹேமலதா கூறுகிறார். இதனை எந்த வகையில் கல்வித்துறை அணுகி தீர்வு காணப் போகிறது என்பது அந்த ஆண்டவனுக்கே வெளிச்சம் (அட போப்பா... அவருக்கும் ஏதாச்சும் கவனிச்சா போச்சு... என யாரும் சொல்லிடாதீங்க... ப்ளீஸ்).

# வெள்ளம் கொள்ளை கொண்ட கல்வி

## Chemistry க்கு கிரேஸ் மார்க் – தினமலருக்கு பாராட்டு

தமிழகம் குறிப்பாக வடமாநிலங்களில் வெள்ளத்தின் சீற்றத்தை, அதன் பாதிப்பை நாம் அனைவரும் அறிவோம். இந்த வெள்ளம் உயிர்சேதத்தை, பொருட் சேதத்தை நமக்கு பரிசாக தரவில்லை.

நமது 10ம் வகுப்பு, 12ம் வகுப்பு மாணவர்களின் அறிவான நேரத்தையும் அவர்கள் பயில வேண்டிய காலத்தையும் கொள்ளை கொண்டது தான் உண்மை. இதுபோன்ற காலத்தில், கிட்டத்தட்ட 40 நாட்கள் மாணவர்கள் பள்ளிக்கு செல்லாமல் வீட்டில் முடங்கி கிடந்தனர். அவர்கள் ரிவிஷன் செய்ய வேண்டிய அல்லது திருப்புதல் செய்ய வேண்டிய பொன்னான தருணங்களை வெள்ள மகாபாதகன் கொள்ளை கொண்டதனால் மாணவ, மாணவியர் நிலைக்குலைந்து போயினர்.

இத்தருணத்தில் நடக்கும் தேர்வுகள் என கருத்தில் கொண்டு அரசு தேர்வுத்துறை இன்னும் அதிக கவனத்துடன் கையாண்டிருக்க வேண்டும். Chemistry மற்றும் Maths ஆகிய பாடங்கள் மருத்துவம் மற்றும் பொறியியல் படிப்பினை தேர்வு செய்யும் மாணவியர்களுக்கு மிகவும் இன்றியமையாதது.

கணிதம் மிக கடினமாக இருந்தது என மாணவியர் கண்கலங்கியபடி தேர்வு அறையிலிருந்து செல்வதை பார்க்க முடிந்தது. Chemistry மிக கடினமாக இருந்ததாக மாணவ, மாணவியர் அழுதபடியே வெளியே வந்தனர். Chemistry தேர்வு சரியாக எழுத முடியாத காரணத்தால் 2 பேர் தற்கொலையும் செய்து கொண்டது பரிதாபம். இந்த வெள்ள நேரத்தில் கவனமாக வினாத்தாளை தேர்வுத் துறை தயாரித்திருப்பார்கள் என மக்களின் எதிர்பார்ப்பு இருந்தது.

இந்த செய்திகள் ‘தினமலரில்’ (மார்ச் 15) மிக தெளிவாக வெளியிடப்பட்டு மாணவ, மாணவியர்களின் எதிர்காலம் குறித்த பயத்தினை அடிக்கோலிட்டு காட்டி செய்தி வெளியிட்டது பாராட்டத்தக்கது.

இதன் விளைவாக ஏ வகையில் 18, பி வகையில் 17 Out of syllabus ஆக இருந்தது. 70வது கட்டாய கேள்வியில் 11 எண்ணிக்கு பதிலாக ரோமன் மிமி என்ற வார்த்தை இருந்தது. எனவே இந்த வினாக்களுக்கு மாணவ, மாணவியர்கள் எந்த பதில் அளித்திருந்தாலும் கருணை அடிப்படையில் மதிப்பெண்கள் வழங்கலாம் என அறிவுறுத்தியுள்ளது நமது மாணவ, மாணவிகளுக்கெல்லாம் மகிழ்ச்சியான செய்தியாக அமைந்துள்ளது. தினமலரின் கல்விப்பணிக்கு எமது SCHOOL VOICE ன் பாராட்டுதலை தெரிவித்துக் கொள்கிறேன்.






சென்னை ஜஎம்எஸ் மனோகரன் மற்றும் டிஜ சத்தியமூர்த்தி ஆகியோர் கலந்து கொண்ட மாணவர் வழிகாட்டு முகாமில்....



புதிய சென்னை மாவட்ட தொடக்க கல்வி அலுவலராக (டிஇஇஓ) திருமதி அமுதா அவர்களுடன் நமது சங்க நிர்வாகிகள்.



நமது அரியலூர் மாவட்ட நிர்வாகிகளுடன் தலைவர் டாக்டர் ராஜா, டாக்டர் லாரன்ஸ் ஆகியோருடன் நமது தலைவர்கள்.



சிவகங்கை சாம்பவிகா பள்ளியில் நடைபெற்ற மாவட்ட கூட்டத்தில் தலைவர் ஜெயதாஸ், செயலாளர் குமார், பொருளாளர் பிச்சை, கௌரவ தலைவர் சேகர் ஆகியோருடன் நமது நிர்வாகிகள்.



மதுரை மாவட்ட கூட்டத்தில் திரு.ராமச்சந்திரன், திரு.பெருமாள் காந்தி, திரு.சொக்கலிங்கம், நிர்வாகிகளுடன் நமது மாநில தலைவர்கள்



புதுக்கோட்டை மாவட்ட கூட்டத்தில் திரு.அண்ணாதுரை, திருமதி கருணை செல்வி ஆகியோருடன் நமது நிர்வாகிகள்.



make your students
future ready

ANDROID ROBO
FUTURE BEGINS HERE
ROBOTIC EDUCATION AT SCHOOLS

Open up the World of Robotics to your Students
through Android Robo, a company training over 25,000 Students in over 60 Schools

Zero investment for Schools | We invest on Kit Boxes | We provide teaching staff | We provide course material | We take care of the entire process

BENEFITS TO THE STUDENTS
Knowledge on Mechanical, Electronics, Electrical and Programming | Knowledge on S.T.E.A.M
Increased Observation, Cause and Effect | Increased Thinking | Induced Creativity

AN UNIT OF
IWIZ ANDROID ROBO PVT LTD
Building Future Scientists

Give your students the best.
Call us today, we'll take care of the rest
+91 99412 64064

shiva@androidrobo.com | www.androidrobo.com | facebook.com/androidrobo

Owned & Published by
**M.J.MARTIN KENNEDY**
Published from No.14, Robinson Park Colony,
Old Washermenpet, Chennai-600 021.
Printed by J.Gowrinathan at Sri Gowri Graphics, New No.9,
Old No.4/2, Maniganda, 4th Street, Old Washermenpet, Chennai-21.
Editor: M.J.JOHN AROKI A PRABHU Phone: 99400 51234
"SCHOOL VOICE" a English & Tamil Bi-monthly Magazine, RNI NO.TNBIL/2014/60761/ R.Dis.No.1447/2013

BOOK-Post